பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 08 சனிக்கிழமை 22.03.2025 | அதிர்வு 231

## யாழில் இந்து மயானத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் நின்ற யுவதி ஒருவர் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து மயானம் ஒன்றில்

02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# மீண்டும் இணைந்தனர் கருணா - பிள்ளையான்

## கிழக்கு அரசியலில் பெரும் பரபரப்பு

பிள்ளையான் என்றழைக் கப்படும் முன்னாள் இரா ஜாங்க அமைச்சர் சிவநேச துரை சந்திரகாந்தனால் மட்டக்களப்பில் உருவாக் கப்பட்ட “கிழக்கு தமிழர் கூட்டமைப்பு“ என்ற புதிய கூட்டமைப்பில் கருணா அம் மான் என்றழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் இணைந்து கொண்டார். அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று சனிக் கிழமை மட்டக்களப்பு றிவோரா ஹோட்டலில் கைச் சாத்திடப்பட்டது.

04 ▶



## இளைஞர்கள் இருவர் சுட்டுப் படுகொலை!



மாத்தறை – தெவிநுவர பகுதியில் மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்ப வத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரை இலக்கு வைத்தே இந்தத் துப்பாக் கிச்சூடு மேற்கொள்ளப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வான் ஒன்றில் வந்தவர்களால் நேற்று வெள்ளிக்கிழமை இரவு இந்தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது.

அவர்கள் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்று சிறிது தூரத்துக்குப் பின்னர் குறித்த வானை தீ மூட்டி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையில், எரிந்த நிலையில்,

02 ▶

# மன்னாரில் கோர விபத்து ஒருவர் பலி; மூவர் காயம்





(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் – பள்ளமடு பெரிய மடு பிரதான வீதியில் இன்று சனிக் கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத் தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

02 ▶

## ஐக்கிய மக்கள் சக்தியின்

# கொழும்பு மேயர் வேட்பாளராக களமிறங்கும் ருவைஸ் ஹனிபா



கொழும்பு மாநகர சபைக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் மேயர் வேட்பாளராக வைத்தியர் ருவைஸ் ஹனிபா களமிறங்குகின்றார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பு மாநகரப் பகுதியில் வசிப்பவர்களின் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றக்கூடிய தலைவராக வைத்தியர் ஹனிபா இந்தத் தேர்தலில் களமிறங்குகின்றார் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

மருத்துவ நிபுணரான ஹனிபா, நீர்கொழும்பு, அம்பாறை மற்றும் ஸ்ரீஜயவர்தனபுரவிலுள்ள மருத்துவமனைகளில் பணியாற்றியுள்ளார், ஆயிரக்கணக்கான நோயாளிகளின் பராமரிப்புக்குப் பங்களித்துள்ளார்.

இலவசக் கல்வியை வலுப்படுத்துவதில் சிறப்பு கவனம் செலுத்தி, களனி மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களில் தற்போது விரிவுரை செய்யும் ஒரு கல்வியாளரும் ஆவார். மேலும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் குடும்ப சுகாதார பிரிவை நிறுவிய நிறுவன உறுப்பினர்களில் ஒருவராகவும் அவர் காணப்படுகின்றார்.

மேம்பட்ட உட்கட்டமைப்பு, வீட்டுவசதி தீர்வுகள் மற்றும் புதிய வருமானம் ஈட்டும் வழிகளைக் கொண்ட ஒரு வளமான மற்றும் நவீன நகரத்தை உருவாக்குவதே கொழும்புக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைநோக்குப் பார்வை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

ஹனிபா ஊழல் இல்லாத புதிய முகத்தையும் புதிய தலைமையையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். தலைநகரில் நிலையான வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**யாழில் இந்து....**

ஐஸ் போதைப்பொருளுடன் இளம் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இருபாலை இந்து மயானத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் நின்ற பெண் ஒருவர் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அந்தப் பெண்ணைக் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

மேற்படி பெண்ணிடம் இருந்து ஐஸ் போதைப்பொருளைப் பொலிஸார் மீட்டனர்.

கைதான பெண் திருகோணமலை பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரான பெண்ணைப் பொலிஸார் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியதைத் தொடர்ந்து அவரை எதிர்வரும் 4ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.

**இளைஞர்கள் இருவர்...**

வான் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

மாத்தறை – தெவிநுவர பகுதியைச் சேர்ந்த 28 மற்றும் 29 வயதுடைய இளைஞர்கள் இருவரே உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

**மன்னாரில்...**

பெரிய மடு பிரதான வீதியூடாகப் பயணித்த டிப்பர் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகிய நிலையில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

டிப்பர் வாகனத்தில் 4 நபர்கள் பயணித்தனர். இதன்போது ஈச்சளவக்கை கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் சாரதி உள்ளடங்களாக மூவர் காயமடைந்தனர்.

காயமடைந்த மூவரும் உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

உயிரிழந்தவரின் சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# பருத்தித்துறையில் 300 கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சா சிக்கியது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்பளை – மூர்க்கன் கடற்கரைப் பகுதியில் 154 பொதிகளில் 300 கிலோகிராமுக்கும் அதகமான கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இராணுவப் புலனாய்வாளர்களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இராணுவம், பொலிஸார் மற்றும் கடற்படையினரால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, மீன்பிடிப் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

பருத்தித்துறை பொலிஸ் தலைமை அதிகாரி சம்பவ இடத்துக்கு நேரடியாக வருகை தந்து குறித்த விடயத்தை ஆராய்ந்தார்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் பெருந்தொகை கேரள கஞ்சா சிக்கியுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளைப் பருத்தித்துறை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# யாழில் போதையில் குடும்பத்துடன் தகராறு செய்த இளைஞர் கைது!

யாழ்ப்பாணத்தில் போதையில் தனது குடும்பத்தினருடன் தகராறில் ஈடுபட்ட இளைஞரை ஊர்காவற்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ். ஊர்காவற்றுறை பகுதியைச் சேர்ந்த 18 வயதான இளைஞர் ஒருவர் போதையில் வீட்டாருடன் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

அது தொடர்பில் வீட்டாரால் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, அந்த வீட்டுக்குச் சென்ற பொலிஸார் இளைஞரைக் கைது செய்தனர்

மேற்படி இளைஞர் கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருட்களுக்கு அடிமையானவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ். நூலகத்தை எரித்த பாவிகள்தான் எங்களைக் கொலைகாரன் என்கிறார்கள்

## ஐ.தே.கவைப் போட்டுத் தாக்கிய அமைச்சர் சந்திரசேகர்

ஐக்கிய தேசியக் கட்சியே இலங்கையில் கொலை மற்றும் சித்திரவதைக் கலாசாரத்தை உருவாக்கியது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

“கொலைப்பட்டியல் தொடர்பில் எதிரணி உறுப்பினர் ஒருவர் உரையாற்றினார். இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த பிறகு



ஐக்கிய தேசியக் கட்சியினரே கொலைக் கலாசாரத்தை அறிமுகப்படுத்தினர்.

1956,1958 இல் எமது மக்களைக் கொலை செய்தார்கள். இந்த நாட்டில் இனக்கலவரத்தைத் தூண்டினார்கள். அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பவற்றைக் கொண்டு வந்து இளைஞர்களைச் சித்திரவதைகளுக்கு உட்படுத்திக் கொலை செய்தார்கள்.

யாழ். நூலகத்தை எரித்து சாம்பலாக்கிய பாவிகள்தான் ஐக்கிய தேசியக் கட்சியினர். இவர்கள்தான் இன்று எம்மைக் கொலைக்காரன்கள் என்கின்றார்கள்.

சிறைச்சாலையில் இருந்த குட்டிமணி, ஜெகநாதன் போன்றவர்களின் கண்களைத் தோண்டி எடுத்து சிறைக் கைதிகளைக் கொன்றவர்கள்.

போர் மூள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் இன்று தங்களைப் புனிதர்களாகக் காண்பித்துக்கொள்வதற்கு முற்படுகின்றனர்.” - என்றார்.




# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## மீண்டும் இணைந்தனர்...

நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவைத் தொடர்ந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்குவதற்காகப் புதிய முயற்சியொன்றை பிள்ளையான் மேற்கொண்டு ‘கிழக்கு தமிழர் கூட்டமைப்பு’ எனும் புதிய கூட்டமைப்பை உருவாக்கினார். அதில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகத்தினர் இணைந்து கொண்டதுடன் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 15 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

இதனையடுத்து, எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் படகு சின்னத்தில் இணைந்து வியாழேந்திரன் அணியினர் களமிறங்கியுள்ளனர்.

இந்தநிலையில், கிழக்கு தமிழர் கூட்டமைப்புக்கும் கருணா தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று கைச்சாத்தானதையடுத்து, பிரிந்திருந்த கருணா – பிள்ளையான் ஆகியோர் மீண்டும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த இணைவு கிழக்கு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.







நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பயனற்று ஆறு மாதங்கள்

தேசிய மக்கள் சக்தியின் அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்று இன்றுடன் ஆறு மாதங்கள் பூர்த்தியாகின்றன.

நிர்வாகக் கட்டமைப்பு மாற்றங்கள் உட்பட பல்வேறு ஆட்சி முறை மாற்றங்களும் அதிரடி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்று ஆரவாரமாகப் பிரச்சாரம் செய்து, அவற்றின் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலிலும் பின்னர் வந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் பெருவெற்றியீட்டி அதிகாரத்துக்கு வந்த அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு, கடந்த இந்த ஆறு மாத காலத்தில் வாய்ச்சவடாலைத் தொடர்ந்தும் அரங்கேற்றியமையைத் தவிர வேறு எதையும் சாதித்ததாகத் தெரியவில்லை.

கடந்த காலத்தில் அரசியல் ஊழல்கள், நிதி மோசடிகள், நிர்வாகக் குளறுபடிகள் போன்றவற்றில் ஈடுபட்ட பிரதிநிதிகளை இழுத்து, வந்து சிறையில் அடைத்து, அவர்களிடம் இருந்து அவர்கள் கொள்ளையிட்ட நாட்டின் வளத்தை மீட்போம் என்றார்கள். நடக்கவில்லை.

ஊழலை ஒழிப்போம் என்றார்கள். ஆனால் அப்படி ஒன்றும் நடந்ததாகத் தெரியவில்லை.

ராஜபக்ஷ குடும்பம் திருடிக் கொண்டு உகண்டாவுக்கு கொண்டு சென்ற பணத்தை மீட்போம் என்றார்கள். நடக்கவே இல்லை.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மாற்றீடின்றி ஒழிப்போம் என்றார்கள். இப்போது மாற்றுச் சட்டம் பற்றி பேசுகிறார்கள். அதுவும் கூட வெறும் பேச்சளவில்தான்.

இணைய வழிப் பாதுகாப்பு சட்டத்தில் உள்ள தவறுகளை திருத்தி அமைப்போம் என்றார்கள். அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆட்சி முறைமை மாற்றத்திற்காக அரசமைப்பை மாற்றி அமைப்போம் என்றார்கள். அதை இப்போது மூன்று ஆண்டுகள் தள்ளிப் போட்டு விட்டார்கள் எனக் கூறுகிறார்கள். ஓர் அரசின் ஆட்சி அதிகாரத்தின் முடிவில் அரசமைப்பு மாற்றம் என்பது பெரும்பாலும் சாத்தியப்படாத விடயம். ஆகையினால் 'ஆறிய கஞ்சி பழங்கஞ்சி' என்ற மாதிரி இந்த அதிகார பீடத்தின் கீழ் அரசமைப்பு மாற்றமும் உருப்படப் போவதில்லை என்பதும் ஓரளவு தெளிவாகிவிட்டது.

புதிய அரசமைப்பு உருவாகும் வரை 13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் பூரண நடைமுறையாக்கத்தோடு மாகாண சபை முறைமை முழு அளவில் செயல்படுத்தப்படும் என்றார்கள். கடந்த ஆறு மாதத்தில் அது தொடர்பில் உருப்படியாக எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

இன்னும் சற்றுக் காலம் உருட்டி விட்டு, புதிய அரசமைப்பின் கீழ்தான் மாகாண அதிகாரப் பகிர்வு நடைமுறையாக்கம் என்று சொல்லி காலத்தை இழுத்தடிக்க போகின்றார்கள் என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

மின்சாரக் கட்டணம் குறையும் என்றார்கள். போகிற போக்கில் அது எகிறும் சாத்தியமே தென்படுகின்றது.

அரிசி மாபியாவை ஒழிப்பார்கள் என்றார்கள். ஆனால் அரிசித் தட்டுப்பாடு, விலை உயர்வு என்பன தவிர்க்க முடியாத கட்டாயமாகி வருகின்றன.

குறிப்பிடத்தக்க நேரடி வெளிநாட்டு முதலீடு எதுவுமே கடந்த ஆறு மாத காலத்தில் நாட்டுக்குள் உள்ளீர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அந்நிய செலாவணி கையிருப்பை மேம்படுத்துவதற்காக ஏற்றுமதி பொருளாதார விருத்தி என்றார்கள். அப்படி எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை.

மாதந்தோறும் உள்நாட்டு கடன் பல்லாயிரம் கோடி ரூபா பெறப்பட்டு வருவதாக ஓர் அதிர்ச்சிச் செய்தி உண்டு. அவை ஒன்று சேர்ந்து கழுத்தை நெரிக்கும்போது அதனை எப்படி சமாளிக்க போகிறார்கள் என்றும் தெரியவில்லை.

சர்வதேச நாணய நிதியத்துடனான பொருளாதார உடன்பாட்டு ஏற்பாடுகளை மறுசீரமைப்போம் என்றார்கள். இப்போதும் ரணில் அரசு கொண்டு வந்த திட்டத்தின் தடத்திலிருந்து மாற முடியாதவர்களாக தொடர்ந்து அந்தப் பாதையில் பயணிக்கின்றார்கள்.

முன்னைய ஆட்சிக்கால ஊழல், மோசடி பேர்வழிகளை பாதுகாக்கும் போக்கு தொடர்கின்றது. ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தும் சவடால் பேச்சும் காற்றில் பறந்து விட்டது.

ஒட்டுமொத்தத்தில் பிரச்சாரக் கூட்டங்களில் முழங்கியமையைத் தவிர, வேறு எதையும் செயலில் அநுர குமார திஸநாயக்கவின் தலைமைத்துவம் வழங்கவே இல்லை என்பதுதான் ஆறு மாத காலப் பட்டறிவு.

# மன்னார் ஓய்வூதியச் சங்கத்தின் புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் ஐந்து பிரதேச பிரிவுகளிலுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உறுப்பினர்களாக இருக்கும் மன்னார் மாவட்ட ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் 37 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தச் சங்கத்தின் முன்னாள் தலைவர் எஸ்.சூசைதாசன் தலைமையில் நடைபெற்றபோது மன்னார் நகர பிரதேச செயலாளர் எம்.பிரதீப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அத்துடன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தச் சங்கத்தைச் சார்ந்த ஓய்வூதியம் பெறுவோரும் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது இச்சங்கத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான நடப்பு வருட நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

இதில் தலைவராக எல்.எம்.தர்மதாஸ், செயலாளராக எஸ்.எம்.அன்ரனி குரூஸ், பொருளாளராக ஏ.பிரான்சீஸ், உப தலைவர் எல்.ஸ்ரீபன் குரூஸ், உப செயலாளர் எஸ்.சூசைநாயகம் றெவ்வல் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக எஸ்.ஆர்.குறேதாஸ் மார்க், எஸ்.ஏ.ராதா பெர்னாண்டோ, ஏ.அன்ரன் செசாரியஸ் குரூஸ், எஸ்.ஏ.உதயன் துரம், எஸ்.செபஸ்ரியான், திருமதி பி.சித்திவிநாயகம், மர்சால் நீக்கிலான், திருமதி பாலு சரஸ்வதி ஜோதிலிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.





# வேள்ட் விஷன் நிதியுதவியில் உடப்பில் சிறுவர் பூங்கா திறப்பு

(உடப்பு மகாதேவன்)

உடப்பு கிராமத்தில் வேள்ட் விஷன் ஆதரவில் 20 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா நேற்று வெள்ளிக்கிழமை (21) திறந்து வைக்கப்பட்டது.

முந்தல் பிரதேசசெயலக திட்டமிடல் பணிப்பாளர் நிஷாந்த தேசப்பிரிய, வேள்ட் விஷன் செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர் டில்ஷான் ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைத்தனர்.

அத்துடன் இந்து ஆலய பரிபாலன சபைத் தலைவர் வை.கந்தசாமி, முன்னாள் அதிபர்கள், பாடசாலை அதிபர்கள், உடப்பு பொலிஸ் நிலைய அதிகாரிகள், அபிவிருத்தி உத்தியோகத்தவர்கள், கிராம உத்தியோகத்தர்கள், இந்து மதகுருமார்கள், இஸ்லாமிய மதத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# அக்கரைப்பற்றுப் பிராந்தியத்துக்கு புதிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்

(வி.ரி. சகாதேவராஜா)

அக்கரைப்பற்று பிராந்திய புதிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக தந்தநாராயண நியமிக்கப்பட்டுள்ளார்.

கொட்டாவையைச் சேர்ந்த இவர் கொழும்பில் பணியாற்றியவர்.

அக்கரைப்பற்று அம்பாறை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகராக பி. பண்டார சேவையாற்றி வந்தார்.

அவர் அம்பாறை பிராந்தியத்துக்குப் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

அக்கரைப்பற்று பிராந்திய பொலிஸ் பிரிவானது இறக்காமம், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு ஆகிய பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.





# பெண் சுய தொழில் முயற்சியாளர்களுக்கு ஜப்பான் அரசு மன்னாரில் உதவி வழங்கல்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

'பெண்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தல் மற்றும் முயற்சியாண்மையை மேம்படுத்துதல்' எனும் தொனிப் பொருளில் ஜப்பான் அரசின் நிதி உதவியின் கீழ் மன்னார் மாவட்டத்தில் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான உதவி திட்டம் வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை (21) மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜப்பானின் தூதரகத்தின் துணைத் தலைவர் பிரதி அமைச்சர் கமோஷிடா மற்றும் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரச அதிபர் கனகேஸ்வரன் உள்ளடங்களாக பிரதேச செயலாளர்கள், பெண்கள் அமைப்பின் பிரதி நிதிகள் மற்றும் பெண் சுய தொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது சுய தொழில் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. மன்னார் மாவட்டத்தில் உள்ள சுயதொழில் உற்பத்தி பெண் முயற்சியாளர்களால் தயாரிக்கப்பட்ட பல்வேறு உணவுப் பொருள்கள், கலைப் பொருள்கள், ஆடை வகைகள் கண்காட் சிகள் இடம்பெற்றதுடன் விற்பனை சந்தையும் இடம் பெற்றது.



அதே நேரம் சுய தொழில் முயற்சி மற்றும் வியாபார முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் ஜப்பான் அரசின் நிதி உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கான தையல் இயந்திரம், பாப்கோன் மெஷின், குளிர்சாதன பெட்டி உள்ளடங்களாக பல்வேறு தொழில் உபகரணங்கள் வைபவரீதியாக கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# சாரணர் சங்கத்தால் ஊடக பயிற்சி நெறி!

(றிபாஸ்)

இலங்கை சாரணர் சங்கத்தின் ஊடகப்பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மூன்று நாள் ஊடப்பயிற்சி பாசறை சப்புகஸ்கந்த மாகொலயில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் நேற்று (21) ஆரம்பமானது.

பிரதம சாரண ஆணையாளரின் வழிகாட்டலின் கீழ் ஊடகத்துக்குப் பொறுப்பான உதவிப் பிரதம ஆணையாளர் பிரபாத் குலரத்ன தலைமையில் நடைபெற்ற இந்த ஊடகப் பயிற்சிப் பாசறைக்கு வடக்கு, கிழக்கு உட்பட சகல மாவட்டங் களில் இருந்தும் ஊடகத்துக்குப் பொறுப்பான உதவி மாவட்ட சாரண ஆணையாளர்கள் கலந்து கொண்டனர்.

ஊடகம் மற்றும் மக்கள் தொடர்வு எனும் தலைப்பில் நாளை ஞாயிற்றுக்கிழமை வரை இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறி ஊடகத்துறையில் பலவருட அனுபவங்களைக் கொண்ட ஊடகவியலாளர்களால் நடத் தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.









# ஆசிரியர் வழிகாட்டல் நிகழ்வில் முக்கிய வளவாளராக ஆளுநர்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரட்ணசேகர அண்மையில் புதிதாக நியமனங்களை பெற்ற ஆசிரியர்களுக்கான இரண்டு வழிகாட்டுதல் நிகழ்ச்சிகளில் முக்கிய வளவாளராகப் பங்கேற்றார்.

புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான இரண்டு வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



# சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற வாராந்த நிகழ்வும் உதவி வழங்கலும்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில்,நேற்று வெள்ளிக்கிழமை ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வில் ஆன்மீக அருளுரையாக மகாபாரதம் என்ற தொடர் சொற்பொழிவை ஆசிரியர் இரா.செல்வவடிவேல் நிகழ்த்தினார்.

ஆச்சிரமத்தின் உதவித் திட்டங்களாக, யாழ். விழிப்புலனற்ற சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக, பார்வையற்ற இரண்டு குடும்பங்களின் வீடுகளுக்கு புதிய மின் இணைப்புக்கான செலவாக ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா நிதி யாழ். விழிப்புலனற்றோர் சங்கப் பொறுப்பாளர் ரவீந்திரனிடம் வழங்கப்பட்டது.



குப்பிழானைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு விவசாயத் தேவைக்காக 70 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டது.

இந்த உதவித் திட்டங்களை ஆச்சிரமத்தின் சார்பில் ஆசிரியர் இரா செல்வவடிவேல் வழங்கினார்.





# மாற்றுத்திறனாளிகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சி திட்டம் திருகோணமலையில்!

( ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் மாற்றுத் திறனாளிகளை வலுப்படுத்தும் செயற்றிட்டம் நேற்று (21) திருகோணமலை நகர சபை பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு திருகோணமலை மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர் த.பிரணவன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பட்டினமும் சூழலும் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் மற்றும் சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் வி. இளையராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வித்தியாலய பழைய மாணவனும் ஓய்வு நிலை அதிபருமான இளையதம்பி இராகவன் கலந்து கொள்ளவுள்ளார்.



# சம்மாந்துறையில் நடந்த பற்சுகாதார விழிப்புணர்வு

(நூருல் ஹுதா உமர்)

உலக வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட முன்பள்ளி மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கான பற் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு சம்மாந்துறை லயன்ஸ் கழக அனுசரணையில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத் தலைமையில் நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் முன்னால் அமைந்துள்ள ஒக்ஸ்போர்ட் முன்பள்ளி மாணவர்களுக்கான வாய்ச் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு பாடசாலை பல் சிகிச்சையாளர் எப். ஸாஹிரா பேகமால் நடத்தப்பட்டது. பல் துலக்கும் முறை தொடர்பான விளக்கமும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் பைலான் நளீம், பொது சுகாதார பரிசோதகர் என். தினேஷ், பொது சுகாதார மருத்துவ மாது நஜீம், உளவள ஆலோசகர் திருமதி எப். பர்ஸானா ஆகியோரும் உரையாற்றினர்.பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், முன்பள்ளி மாணவர்கள், அவர்களது பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

## நியாயம் கோரும் பட்டலந்த வதைமுகாம்!

# நீதி மறுக்கப்பட்ட சத்துருக் கொண்டான் படுகொலை!!



■ நவீனன்

நீண்டகாலமாக இலங்கை அரச பயங்கரவாத நடவடிக்கைகளால் தமிழர்களுக்கு ஏற்பட்ட வதைகள், கொலைகள், காணாமல் ஆக்கப்பட்டதை விசாரணை நடத்தி நீதி வழங்கும் என்பதை எதிர்பார்க்க முடியாது.

**இலங்கை அரச பயங்கரவாதம்**

தேர்தல் வெற்றிக்காகவே பேச்சளவில் இன நல்லிணக்கம், சம தர்மம், தேசிய ஒற்றுமை என பறைசாற்றும் தற்போதைய அநுர அரசு, தமிழர் மீதான படுகொலைகளுக்கு நீதி வேண்டும் என்று கேட்பதே நகைப்புக்கிடமாகும்.

தற்போது மாற்றங்களை மையப்படுத்தி ஆட்சிக்கு வந்திருக்கும் அநுர அரசும் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைகளுக்கு நீதி வழங்கும் என்று நம்பிக்கை கொள்ள முடியாது. ஜெனிவாவில் மனித உரிமை மீறல்களை உள்ளக விசாரணை மூலமே தீர்க்க முடியும் என்று உறுதியாக அநுர அரசு தெரி வித்துள்ளது.

இனியும் இந்த விவகாரத்தில் தலையிட்டு நீதி வழங்கும் என்ற நம்பிக்கையைத் தமிழ் மக்கள் இழந்து விட்டனர். காலங்காலமாக தமிழ் மக்களின் மீது போர் தொடுத்த சிங்கள அரசுகள் ஒரு போதும் நீதியை வழங்கப் போவதில்லை என்பதைத் தமிழ் மக்கள் அறிவார்கள்.

இன நல்லிணக்கம், உண்மையை கண்டறிதல் என்ற அடிப்படையில் தேர்தல் பரப்புரையில் தெரிவித்து ஆட்சியை பிடித்துள்ள இந்த அரசும் எவ்வகையிலும் தமிழ் மக்களின் இறையாண்மையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பது தெரிகிறது.

தற்போது ஊடகங்களில் பரபரப்பாக பேசப்படும் பட்டலந்த வதைமுகாம் பற்றிய விவகாரம் அனுரவின் தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

**பட்டலந்த கொடூர வதைமுகாம்**

1987- 1989 ஜேவிபி கிளர்ச்சியினருக்கு எதிரான பட்டலந்த வதைமுகாம் கொடுமைகள், தற்போது ஜே.வி. பியினர் ஆட்சியதிகாரத்துக்கு வந்ததன் பின்னர், சுமார் 37 ஆண்டுகளுக்கு முந்திய உண்மைகளை வெளிக்குக் கொண்டு வந்துள்ளனர்.

அதாவது ஜே.வி.பியினர் ஆட்சிக்கு வந்ததால்தான் ஜே.வி.பியினருக்கு எதிரான சட்டவிரோதக் கொடிய செயல்களை அம்பலத்துக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் வடக்கு, கிழக்கில் பட்டலந்தை போன்ற வதை முகாம்கள் பல இருந்தன. அரச படைகளாலும், இராணுவ துணைக் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு இதுவரை விசாரணைகள் எதுவும் நடைபெறவில்லை.

இவற்றை ஆராய்ந்து நீதி வழங்கும் நேர்மை கடந்தகால சிங்கள அரசுகளுக்கு இருக்கவில்லை.

தற்போது ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தி அரசு தமது ஜே.வி.பி. சகாக்கள் கொல்லப்பட்டதால் பட்டலந்த வதைகள் கொலைகளை விசாரிக்க முன் வந்துள்ளது.

35 ஆண்டு கடந்துள்ள நிலையில் மட்டக்களப்பை உலுக்கிய சத்துருக்கொண்டான் படுகொலைகள் பொய்யாகிப்போன நீதி விசாரணைகளால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

1990 ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் 09 ஆம் திகதி நடைபெற்ற அப்பாவித் தமிழ் மக்களின் மீதான படுகொலையே மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற மிகப் பெரிய மிகக்கொடூரமான படுகொலை எனக் கூறப்படுகின்றது.

ஈழத்தில் பல இடங்களில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஆயினும் இந்த சம்பவம் நடைபெற்று 35 ஆண்டு கடந்துள்ள நிலையில் இந்த சம்பவத்துக்குக் காரணமானவர்கள் யாரும் இலங்கை அரசால் இதுவரை தண்டிக்கப்படவில்லை என்பதே அந்த மக்களின் ஆதங்கமாக உள்ளது.

தற்போது மாற்றங்களை மையப்படுத்தி ஆட்சிக்கு வந்திருக்கும் அநுர அரசும் இந்த விவகாரத்தில் தலையிட்டு நீதி வழங்கும் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்து விட்டனர். காலங்காலமாக தமிழ் மக்களின் மீது போர் தொடுத்த சிங்கள அரசுகள் ஒரு போதும் நீதியை வழங்கப் போவதில்லை என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள்.


முள்ளிவாய்க்கால் படுகொலைகள் குறித்து சர்வதேசமும் தொடர்ந்து விசாரணை செய்து வந்தாலும் இதுவரை எவரும் குற்றஞ் சாட்டப்படவில்லை. இத்தகைய சூழ்நிலையே மட்டக்களப்பில் நடைபெற்ற இது போன்ற பல நூறு படுகொலைகளுக்கு பதிலளிக்காமல் இலங்கை அரசும், சர்வதேசமும் தட்டிக் கழித்து வருகிறது.

**மட்டக்களப்பு படுகொலையின் கோரக்களம்**

இரண்டாம் ஈழப் போரில் மட்டக்களப்பை பொறுத்


தொடர்ச்சி▼







# நீதி மறுக்கப்பட்ட சத்துருக் கொண்டான் படுகொலை!!



**தொடர்ச்சி▲**

தமட்டில் 1990 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் என்பது படுகொலைகளின் கொடூரமான மாதமாகவே அமைந்துள்ளது.

சிங்கள ஆட்சியாளர்களால் திட்டமிட்டவகையில் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகக் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என அனைவரையும் கண்மூடித்தனமாகச் சுட்டும் வெட்டியும் பாலியல் பலாத்காரம் செய்தும் கொடுமைப்படுத்திய சம்பவங்கள் மட்டக்களப்பு மக்களை பெரிதும் பாதித்துள்ளது.

படுகொலையான அப்பாவி மக்களுக்கு நீதி கிடைக்கவிடாமல் அடுத்தகட்டத்துக்கு நகர்வதென்பது சர்வதேசத்துக்கான கண்துடைப்பாக அமையுமே தவிர இலங்கை நாட்டின் உண்மையான இன நல்லிணக்கத்துக்கு வழியமைத்துக் கொடுக்கப் போவதில்லை என்பது புலப்படும்.

**நீதி விசாரணை இல்லை**

இலங்கை அரசால், இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்தவென இரு விசாரணை ஆணைக்குழுக்கள் முன்பு நியமிக்கப்பட்டன.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசால் ஓய்வுபெற்ற நீதிபதியான கே.பாலகிட்ணர் இந்த விசாரணைகளை நடத்தவென அக்காலத்தில் நியமிக்கப்பட்டார்.

மிக கொடூரமான இந்தச் சம்பவத்தை விசாரணை செய்த நீதிபதியின் அறிக்கைப்படி 27 வயதான மோகனசுந்தரி எனும் தாயும் அவரது 3 மாதக்குழந்தையும் படையினரால் "மண்ணா" கத்திகளால் சாகும்வரை குத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். அத்தோடு 5 கைக்குழந்தைகள், 42 பத்து வயதுக்கும் குறைவான சிறுவர்கள், 85 பெண்கள், 28 முதியவர்கள் இந்தச் சம்பவத்தின் போது கொல்லப்பட்டுள்ளனர்.

நீதிபதி தனது அறிக்கையில் படுகொலை நிகழ்ந்ததற்கான வலுவான சாட்சியங்கள் இருப்பதாகவும் குற்றவாளிகளுக்கெதிரான கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் ஜனாதிபதியை வேண்டிக்கொண்டார்.

ஆனாலும் இதுவரை இவ்வாறான சட்ட நடவடிக்கைகளோ, பொலிஸ் விசாரணைகளோ மேற் கொள்ளப்பட்டதாகத் தகவல் எதுவும் இல்லை. அவர்கள் இலங்கையின் நீதிமன்றங்களால் தண்டிக்கப்படவில்லை. சம்பவம் நடந்து இன்று 35 ஆண்டுகளாகியும் இக் கொலைக்கான நீதி வழங்கப்படவில்லை.

**சர்வதேச விசாரணைக் கோரிக்கை**

அப்பாவித் தமிழ் மக்கள் தங்களது சொந்தங்களை இழந்த உறவுகள் பலர் 35 ஆண்டுகளுக்கு பின்னரும் தங்களது உறவுகளை நினைவு கூர சிங்கள அரசுகள் அனுமதிப்பதில்லை. கடந்த பல வருடங்களாக மிகுந்த கெடுபிடிகளுக்கு மத்தியிலேயே தங்களது உறவுகளை நினைவு கூர்ந்து வருகின்றனர்.

கடந்த 35 ஆண்டுகளாக இலங்கையில் இருந்த எந்த அரசுகளும் விசாரணைகளை நடத்திக் குற்றவாளிகளைத் தண்டிக்கவில்லை. எனவே இனிமேலாவது சிங்கள ஆட்சியாளர்கள் தங்களுக்கான நீதி பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்து விட்டனர்.

தமிழ் மக்கள் தொடர்ந்தும் இலங்கை அரசை நம்புவதற்குத் தயாராக இல்லை. பரந்த நீதிப்பொறி முறைக்கு ஊடாக தங்களுக்குச் சர்வதேச நீதிபதிகளைக் கொண்ட ஒரு சிறப்பு நீதிமன்றம் ஊடாக ஏற்கனவே கண்டறியப்பட்ட உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு விசாரணை ஒன்றை ஆரம்பித்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வேண்டிக் கொடுப்பதுடன் இதில் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகளையும் வழங்கவேண்டும்.

# AI தொழில்நுட்பத்தில் உருவான முதல் செய்தித்தாளை வெளியிட்டது இத்தாலி

கணினித் துறை மட்டுமின்றி கல்வி, மருத்துவம், இராணுவம் என எல்லா துறைகளிலும் AI பயன்பாடு அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் இத்தாலியிலிருந்து வெளியாகும் இல்ஃபோக்லியோ, நாளிதழ் நிறுவனம், முழுவதும் AI தொழில்நுட்பத்தில் தயாரான நாளிதழை விற்பனைக்குக் கொண்டு வந்துள்ளது.

செயற்கை நுண்ணறிவால் முழுமையாகத் தயாரிக்கப் பட்ட பதிப்பை வெளியிடும் உலகின் முதல் செய்தித்தாள் இது என இத்தாலிய செய்திகள் தெரிவிக்கின்றன.

நான்கு பக்கங்களைக் கொண்ட இல் ஃபோக்லியோ AI செய்தித்தாளானது மெல்லிய அகலத் தாள் பதிப்பில் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல்


IL FOGLIO Ai

quotidiano

PARCO

La Giornata

இச்செய்தித்தாளை இணையதளத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# ஆளில்லா விமானத் தாக்குதல்; சூடான் தலைநகரில் 10 பேர் பலி

சூடான் தலைநகர் கார்ட்டுமில் உள்ள குடியரசுக் கட்சியின் அரண்மனைக்குள் இருக்கும் இராணுவத்தினர் மற்றும் ஊடகவியலாளர்களைக் குறிவைத்து ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சூடானின் குடியரசுக் கட்சியின் அரண்மனையை இராணுவ அதிகாரிகள் நேற்றைய தினம் கைப்பற்றியதைத் தொடர்ந்து இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பு

## *விமான சேவைகள் இரத்து*








இந்தோனேசியாவின் மத்திய தெற்கு மாகாணத்தில் உள்ள எரிமலை வெடித்துள்ளது.

இந்தோனேசியாவின் கிழக்கு நுஸா தெங்காரா மாகாணத்தின் ஃப்ளோரஸ் தீவில் உள்ள லெவோடோபி லகி லகி எனும் எரிமலை நேற்று முன்தினம் நள்ளிரவு வெடித்துள்ளது.

மூன்று முறை இந்த எரிமலை வெடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 26 ஆயிரம் அடி தூரத்துக்கு தீக்குழம்புகள் வெளியேறின.

இதனால் அவுஸ்திரேலியா - இந்தோனேசியா இடையே செல்லும் விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக அப்பகுதியில் 8,000 மீற்றர் உயரத்திற்குச் சாம்பல் படலம் காணப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# கூட்டாட்சி மத்திய அரசின் பரிசு இல்லை, அது மாநில அரசுகளின் உரிமையாகும்

## கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவிப்பு

கூட்டாட்சி என்பது மத்திய அரசு தரும் பரிசு இல்லை, அது மாநில அரசுகளின் உரிமை என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்து நடந்த அனைத்துக் கட்சிக் கூட்ட தீர்மானத்தின்படி, 'கூட்டு நடவடிக்கைக் குழு' அமைத்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாக சென்னையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் தொடங்கி நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாநில முதல்வர்கள், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். இதில் பங்கேற்றுள்ள கேரள மாநில முதல்வர் பினராயி விஜயன் பேசுகையில்,

"மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்பே, மத்திய அரசு தொகுதி மறுவரையறைக்கு அவசரம் காட்டுவது ஏன்? கடந்த முறை நடந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது கேரளாவின் மக்கள் தொகை பெருக்கம் 4 சதவீதமாகத்தான் இருந்தது. இந்த நிலையில், உள்துறை அமைச்சர் அமித் ஷா பேசும் விகிதாச்சார அடிப்படையின் அர்த்தம் என்ன?

இந்தத் தொகுதி மறுவரையறை கூட்டாட்சியை மறுக்கிறது. பிரிட்டிஷாரின் அதிகார குவிப்புக்கு இந்தியர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அதுவே அவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு வழிவகுத்தது. மத்திய அரசு இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தியக் கலாசாரம் என்பது அதன் பன்முகத்தன்மையில் தான் உள்ளது. அதுதான் இந்தியாவின் அடித்தளம்.

கேரள அரசின் குடும்பஸ்ரீ மற்றும் தமிழகத்தின் மதிய உணவுத் திட்டம் போன்றவை பல்வேறு மாநில அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்படுகின்றன. மையப்படுத்துதல் என்பது இத்தகைய முன்னெடுப்புகளை ஒருபோதும் அனுமதிக்காது.

தற்போதைய தொகுதி மறுவரையறை செயல்பாடு வட இந்தியாவுக்கு நன்மைபயக்கும் என்று அறிந்திருப்பதால், மத்திய அரசு இதனை முன்னெடுக்கப் பார்க்கிறது. ஒருபுறம் மக்கள் தொகையை சிறப்பான முறையில் கட்டுப்படுத்தியதற்காக தென்மாநிலங்களை மத்திய அரசு பாராட்டுகிறது. ஆனால் மறுபுறம் மக்கள் தொகை குறைவாக இருப்பதைக் காரணம் காட்டி நமது பங்கினை குறைக்கிறது.

கடந்த 1976 ஆம் ஆண்டு ஒட்டுமொத்த நாட்டுக்கும்



தான் மக்கள் தொகை கட்டுப்பாடு கொள்கை கொண்டு வரப்பட்டது. ஆனால் கேரளா போன்ற சில மாநிலங்கள் மட்டுமே அதை சிறப்பாக செயல்படுத்தின.

இந்தக் கூட்டத்தை நடத்தியதற்காக நான் சகோதரர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பா.ஜ.க. மிகவும் குறுகிய மனப்பான்மையுடன் இந்தத் தொகுதி மறுவரையறை செயல்பாட்டை முன்னெடுக்கிறது. தொகுதி மறுவரையறை என்பது நம் தலைக்கு மேல் தொங்கும் கத்தியாகும். எந்த ஒரு ஆலோசனையும் நடத்தாமல் பாஜக தொகுதி மறுவரையறையை முன்னெடுக்கிறது." என்றார்.

முன்னதாக கூடத்தில் பங்கேற்ற தலைவர்களை வரவேற்றுப் பேசிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்,

"தொகுதி மறுவரையறையை தமிழகம் எதிர்க்கவில்லை. அதனை நியாயமாக நடத்தவே வலியுறுத்துகிறது. பல்வேறு மொழிகள், பண்பாடுகள், உடைகள், வழிபாட்டு நம்பிக்கைகள் உள்ளிட்டவை கொண்டதுதான் இந்தியா. அப்படியிருக்க மாநிலங்கள் சுயாட்சி தன்மையுடன் செயல்பட்டால்தான் இந்தியாவின் உண்மையான கூட்டாட்சி உருவாகும். மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை மூலம் கூட்டாட்சி அமைப்புக்கு சோதனை வந்துள்ளது.

மேலும், மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுவரையறை என்பது தென் மாநிலங்களை கடுமையாக பாதிக்கும். காலம் காலமாக பாதுகாக்கப்படும் நமது சமூக நீதி பாதிக்கப்படும். அதனைத் தடுக்க இந்திய ஜனநாயகத்தை காக்க நாம் இங்கு ஒன்று கூடியுள்ளோம்.

இவ்விவகாரத்தில், உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் விளக்கம் தெளிவாக இல்லை. குழப்பத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது அதனாலேயே முன் எப்போதும் இல்லாத ஒற்றுமையுடன் தமிழகம் ஒன்றிணைந்துள்ளது. இதே ஒற்றுமையுடன் இந்த அரங்கில் கூடியுள்ள அனைவரும் செயல்பட வேண்டும்." என்றார்.

# ஆட்சியின் தவறுகளை மறைப்பதற்கு முதல்வர் ஸ்டாலின் நாடகமாடுகிறார்

## தமிழிசை சாடல்



தனது ஆட்சியின் தவறுகளை மறைக்கவே தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தொகுதி மறுவரையறை தொடர்பான கூட்டத்தைக் கூட்டியுள்ளார் என தமிழிசை சவுந்தரராஜன் விமர்சித்துள்ளார்.

சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் தொகுதி மறுவரையறை தொடர்பான கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பா.ஜ.க. மூத்த தலைவரும் முன்னாள் ஆளுநருமான தமிழிசை சவுந்தரராஜன் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

"காவிரி பிரச்சினைக்காக கர்நாடகாவைச் சார்ந்த தலைவர்களைச் சந்திக்காத முதல்வர் மு.க. ஸ்டாலின், முல்லைப் பெரியார் பிரச்சனைக்காகக் கேரள முதல்வரைச் சந்திக்காத மு.க. ஸ்டாலின் இன்று மக்களை ஏமாற்ற அறிவிக்கப்படாத தொகுதி மறுவரையறை விவகாரத்தை வைத்துக்கொண்டு ஒரு கூட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்.

இது மறுவரையறை கூட்டம் என்பதை விட மறைப்பதற்கான கூட்டம். தனது ஆட்சியின் தவறுகளை மறைக்கவே தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தொகுதி மறுவரையறை தொடர்பான கூட்டத்தைக் கூட்டி இருக்கிறார். உள்துறை அமைச்சர் அமித் ஷா கோவை வந்தபோது, தொகுதி மறுவரையறையில் தமிழகம் பாதிக்கப்படாது என்று தெளிவுபடுத்தினார். எனவே எந்த அடிப்படையில் இந்தக் கூட்டத்தை ஸ்டாலின் நடத்துகிறார் என்று தெளிவுபடுத்த வேண்டும்." என்றார்.

பக்கங்கள் 03

கனடா முரசு

சனிக்கிழமை 22.03.2025

## தமிழ் இளைஞர்கள் கனடாவில் கைது

கனடாவில் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டிய குற்றச்சாட்டில் இரண்டு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விடயத்தை கனடா - டொரண்டோ பொலிஸார் 02




# ட்ரம்ப்புடன் பேச்சு இல்லை: கனடா பிரதமர் திட்டவட்டம்

**கனடாவை இறையாண்மை கொண்ட நாடாக மதிக்கும் வரையில் பேச்சு வார்த்தை இல்லை என கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.**

**அமெரிக்காவின் வரிவிதிப்பால் பாதிக்கப்பட்ட கனடா வணிகர்களை அந்நாட்டு பிரதமர் மார்க் கார்னி சந்தித்து பேசினார். மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகுப்புகளையும், வளத் திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளையும் கார்னி அறிவித்தார்.**

கனேடிய போர் அருங்காட்சியகத்தில் அவர் பேசுகையில்,

"வர்த்தகப் போரினால் அமெரிக்கர்கள் பாதிக்கப்படுவதால், அதனைத் தடுக்கும் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் விரும்புவார். அவர்கள் எப்போது வந்தாலும் அதற்கு நான் தயாராக இருக்கிறேன். இருப்பினும், இறையாண்மை கொண்ட நாடாக கனடாவுக்கான மரியாதை கிடைக்கும்வரையில் ட்ரம்ப்புடன் பேச்சுவார்த்தை நடக்காது." என்றார்.






# கனடாவில் மகிழ்ச்சியாக வாழ்கின்றார் பாரிஸ் வெடிகுண்டு தாக்குதல் குற்றவாளி

பாரிஸ் யூத ஜெப ஆலயத்திற்கு வெளியே நடந்த குண்டுவெடிப்புக்கு தண்டனை பெற்ற நபர் கனடாவில் தொடர்ந்து வசதியான வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார் என யூத ஆதரவு அமைப்புகள் கொதித்துப் போயுள்ளன.

கடந்த 1980 இல் நடந்த இந்த வெடிகுண்டு தாக்குதலுக்கு காரணமானவர் தற்போது 71 வயதாகும் பெய்ரூட்டில் பிறந்த ஹசன் டயப் என்பவரே. தற்போது அவர் கனடாவின் ஒட்டாவா புறநகர் பகுதியில் மகிழ்ச்சியான வாழ்க்கை ஒன்றை முன்னெடுத்து வருகிறார் என்றே யூத ஆதரவு அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

அவர் சட்டத்தை எதிர்கொள்ளாமல் கனடாவில் வசதியான வாழ்க்கை வாழ்ந்துவருவது ஏற்றுக்கொள்ள முடியாது என்றே CIJA அமைப்பின் துணைத் தலைவர் Richard Marceau கொந்தளித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் அரசாங்கம் டயப்பை பிரான்சுக்கு நாடு கடத்த மறுத்துவிட்டது. 03



# கனேடியர்களுக்கு மரண தண்டனை; சர்வதேச மன்னிப்பு சபை கண்டனம்

நான்கு கனேடிய பிரஜைகளுக்கு சீனா மரண தண்டனை வழங்கியுள்ளதாக சர்வதேச அளவில் கண்டனம் எழுந்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுக்கு உள்ளான நான்கு கனேடிய பிரஜைகளுக்கு சீனா மரண தண்டனை வழங்கி இருந்தது.

சீனாவின் சிறப்பு துப்பாக்கி வீரர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் படுகொலைகள் மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் அதிகாரிகளால் கடுமையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, தொடர்புடைய குற்றங்களில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்ட நிலையில், இரட்டைக் குடியுரிமை கொண்ட அவர்களுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என தானும் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவும் கோரியுள்ளதாக கனடாவின் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி தெரிவித்துள்ளார்.

இருப்பினும், ஒட்டாவாவில் உள்ள சீன தூதரகம், போதைப்பொருள் குற்றங்கள் காரணமாக மரணதண்டனைகள் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவித்துள்ளதுடன் இரட்டைக் குடியுரிமையை சீனா அங்கீகரிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

கனேடியர்கள் நால்வருக்கு நிறைவேற்றப்பட்டுள்ள மரண தண்டனைகளை மனிதாபிமானமற்றது என்று கண்டனம் செய்த சர்வதேச மன்னிப்பு சபை, 2023 ஆம் ஆண்டில் சீனா ஆயிரக்கணக்கானோருக்கு மரணதண்டனை விதித்ததாக சுட்டிக்காட்டியுள்ளது.

உலகின் பிற பகுதிகளை விட சீனா ஒவ்வொரு ஆண்டும் அதிகமான கைதிகளுக்கு மரண தண்டனை வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், அந்த எண்ணிக்கை வெளியே கசியாத வகையில் அரசாங்கத்தால் இரகசியம் காக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சீனாவில் பொதுவாக மரணதண்டனைகள் துப்பாக்கிச் சூடு மூலம் நிறைவேற்றப்படுகின்றன இருப்பினும் சமீபத்திய ஆண்டுகளில் விஷ ஊசிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கனேடியர்கள் தொடர்பான இந்த விவகாரம் குறித்து கனடா அரசாங்கம் கடுமையான கண்டனங்களை பதிவு செய்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி தெரிவித்துள்ளார்.

அத்தோடு, அந்த நால்வரின் அடையாள விவரங்களை வெளியிட வேண்டாம் என்று குடும்பங்கள் அரசாங்கத்திடம் கேட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கனேடிய ஊடகங்கள் வெளியிட்டுள்ள தரவுகளின் அடிப்படையில், போதைப்பொருள் குற்றங்களுக்காக சுமார் 100 கனேடியர்கள் தற்போதும் சீனாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சக செய்தித் தொடர்பாளர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் எந்த நாட்டினராக இருந்தாலும் சீனா சமமாக நடத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அதே வேளையில், அவர்களின் வழக்குகளை நியாயமாகவும் கண்டிப்பாகவும் கையாளுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், மரண தண்டனைக்கு எதிரான உலக கூட்டணி அமைப்பு கடந்த 2022 இல் வெளியிட்டுள்ள தரவுகளில், 2007 முதல் சீனாவில் ஆண்டுக்கு குறைந்தது 8,000 பேர் தூக்கிலிடப்பட்டனர்எனசுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஒன்டாரியோ மார்க்கம் பகுதியை சேர்ந்த 25 வயதான கோகிலன் பாலமுரளி, நோர்த் யோர்க் நகரை சேர்ந்த 25 வயதான பிரன்னன் ஸ்கந்த பாலசேகர் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிக்கரிங் நகரில் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினர் என கூறப்படும் குற்றச்சாட்டில் இவர்கள் இருவரை டொரண்டோ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிக்கரிங் Mansion Kitchen and Bar இல் கொலைக்கான இலக்கு வைக்கப்பட்டிருந்தாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய சந்தேக நபர்கள்




இருவர் மீதும் முதல் நிலை கொலை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எதுவும் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மாகாண முதல்வர்களுடன் கனடிய பிரதமர் சந்திப்பு

கனடிய பிரதமர் மார்க் கார்னி ஒட்டாவாவில் கனடாவின் மாகாண முதல்வர்களுடன் சந்திப்பு நடத்து கின்றார்.

மாகாணங்கள் சீனா மற்றும் அமெரிக்காவால் விதிக் கப்பட்ட வரிகளால் பாதிக்கப்படும் விவகாரங்கள் தொடர் பில் விசேட கவனம் செலுத்தப்பட உள்ளது.

இந்த சந்திப்பு, கார்னி பொதுத் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்குவதற்கு சில நாள்களுக்கு முன்பு நடைபெறுகிறது.

இதனால், கனடாவில் ஏப்ரல் 28 ஆம் திகதிக்குள் தேர்தல் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த சந்திப்பு கனடாவை ஒரே பொருளாதாரமாக உருவாக்குவது குறித்து பேச ஒரு வாய்ப்பாக இருக்கும் என அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது, 13 தனித்தனி பொருளாதார அமைப்புகள் உள்ளன.



முக்கியமாக சீனாவின் கனடிய கனோலா எண்ணெய் மற்றும் உணவுப் பொருட்கள் மீதான வரிகள் குறித்து பேச விரும்புவதாக சாஸ்காச்சுவான் மாகாண முதல்வர் ஸ்காட் மோ தெரிவித்துள்ளார்.



# பல்கலைக்கழக வளாகத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

டொரொண்டோ பல்கலைக்கழகத்தின் டவுன்டவுன் வளாகத்தில் ஒரு ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

டொரொண்டோ பொலிசாரின் கொலைக் குற்ற விசா ரணைப் பிரிவு இதனை தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

இந்த சம்பவம் College Street இல் உள்ள Leslie L. Dan மருந்தியல் கட்டிடத்திற்கு வெளியில் காலை 8:20 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆரம்பத்தில், இந்த மரணம் சந்தேகத்திற்குரியதல்ல என்று பொலிஸார் தெரிவித்திருந்தபோதிலும், பின்னர் இது ஒரு கொலை என உறுதி செய்துள்ளனர்.

மருத்துவப் பணியாளர்கள் சம்பவ இடத்திற்கு வந்திருந்தாலும், யாரையும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லவில்லை என தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதுவரை உயிரிழந்த நபரின் அடையாளம் அல்லது சம்பவம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதற்கான தகவல்கள் பொலிசாரால் வெளியிடப்படவில்லை.

டொரொண்டோ பொலிஸார் மற்றும் பல்கலைக்கழக பாதுகாப்பு குழு விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சம்பவம் காரணமாக பொதுமக்களுக்கு எவ்வித பாதுகாப்பு அச்சுறுத்தல்களும் கிடையாது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், அரசாங்கம் மாறினால், டயப் சிக்கலை எதிர்கொள்ளலாம் என்றே நம்பப்படுகிறது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அரசியல்வாதியான Pierre Poilievre தமது சமூக ஊடக பக்கத்தில், சட்டத்தை எதிர்கொள்ள அவரை ஏன் பிரான்சுக்கு இன்னும் நாடுகடத்தவில்லை என கேள்வி எழுப்பியிருந்தார்.

ஆனால், தாம் எப்போது வேண்டு மானாலும் நாடுகடத்தப்படலாம் என்ற மனநிலையிலேயே வாழ்ந்து வருவதாக டயபும் தெரிவித்துள்ளார். 1980 ஒக் டோபர் 3 ஆம் திகதி யூத ஜெப ஆலயத் திற்கு வெளியே நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் நால்வர் கொல்லப்பட்டனர்.

சம்பவத்தின் போது தாம் பெய்ரூட் டில் பல்கலை தேர்வுகளை எதி



ர்கொண்டு வந்ததாக டயப் கூறி வந்தா லும், 2008 இல் கனடாவில் அவர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

2014 இல் அவர் பிரான்சுக்கு நாடுகடத் தப்பட்டு 3 ஆண்டுகள் விசாரணைக் கைதியாக இருந்தார். ஆனால் 2018 இல் அவர் மீதான வழக்குகள் கை விடப்பட்ட நிலையில், அவர் மீண்டும் கனடாவுக்கு திரும்பினார்.

ஆனால், பாரிஸ் மேல்முறையீட்டு நீதிமன்றம் ஜனவரி 2021 இல் அவர் மீதான வழக்குகள் கைவிடப்பட்டதை ரத்து செய்து, அத்துடன் டயப்பை விசா ரணைக்கு உட்படுத்த உத்தரவிட்டது.

பிரான்ஸ் திரும்ப டயப் மறுத்ததை அடுத்து, அவர் ஆஜராகாத நிலையில் 2023 ஏப்ரல் 21 ஆம் திகதி பயங்கரவாத குற்றச்சாட்டுகளுக்கு தண்டனை பெற்று ஆயுள் தண்டனைக்கு விதிக்கப்பட் டார்.

அதுமட்டுமின்றி சர்வதேச கைதா ணையும் அவர் மீது விநியோகிக்கப் பட்டது. இந்த நிலையில் கனடாவில் உள்ள டயப் ஆதரவு குழுவானது அவர் மீதான வழக்குகள் போதிய ஆதார மற்றவை என்றும் 2023 இல் அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனை என்பது போலியான விசாரணையால் ஏற்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளது.